புதுச்சேரி அரசு
மாவட்ட ஆட்சித்துறை நடுவர் அலுவலகம்

No. 7122/Collr./RO/D2/2011 புதுச்சேரி, தேதி 30.08.2011

<u>செய்திக் குறிப்பு</u>

விநாயகர் சதுர்த்தி திருவிழாவிற்காக புதுச்சேரி நகர மற்றும் புறநகர் பகுதிகளில் பல்வேறு இயக்கங்கள் சார்பில் விநாயகர் சிலைகளை வைத்து வழிபாடு செய்துவிட்டு பிறகு அந்த சிலைகளைக் கடலில் கரைப்பது வழக்கமாக இருந்துவருகிறது. அவ்வாறு வழிபாடு செய்யப்படும் சிலைகள் எளிதில் கரையாத மற்றும் நச்சுத் தன்மையுடைய பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படுவதால் அவற்றை கடலில் கரைக்கும் போது அவற்றின்மூலம் சுற்றுச்சூழல் சீர்கேடு அடைவதோடு சுகாதார சீர்கேடும் ஏற்படுவதற்கு காரணமாகிறது. மத்திய சுற்றுபுறச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் இத்தகைய சுற்றுப்புறச்சூழல் சீர்கேடு குறித்து எச்சரிக்கை செய்துள்ளதோடு மட்டுமல்லால் அதனை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தியுள்ளது.

எனவே, பொதுமக்கள் மற்றும் வழிபாட்டு இயக்கங்கள், எதிர்வரும் விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு வினாயகர் சிலைகளை கடலில் கரைப்பதற்குமுன் புதுச்சேரி மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திலிருந்து தடையில்லா சான்றிதழ் பெறவேண்டும் என்றும் கீழ் கண்டவற்றை தடைசெய்தும் குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 144-ன் கீழ் உத்தரவிடப்பட்டுள்ளது.

1. விநாயகர் சிலைகளைச் செய்வதற்கு சுட்ட களிமண்ணை பயன்படுத்தக்கூடாது.

2. விநாயகர் சிலைகளுக்கு வண்ணம் தீட்டுவதற்கு நச்சுத்தன்மையுள்ள மற்றும் எளிதில் கரைந்துபோகாத இரசாயன வண்ணங்களைப் பயன்படுத்துதல் கூடாது.

3. விநாயகர் சிலைகளை கடற்கரையிலிருந்து 500 மீட்டருக்கு முன்பு கடலில் கரைத்தல் கூடாது.

4. வழிபாட்டிற்காகப் பயன்படுத்தப்படும் காகிதம் மற்றும் பிளாஸ்டிக்கினால் ஆன பூக்கள், துணிகள், மற்றும் அலங்காரப் பொருட்களை பொது இடங்களில் வீசி அசுத்தம் செய்யக்கூடாது.

5. வினாயகர் சிலைகளை கடலில் கரைக்கும் இடத்தில் திடக் கழிவுகளை எரித்தல் கூடாது.

(Dr. சு.பா. தீபக் குமார். இ.ஆ.ப)
மாவட்ட ஆட்சித்துறை நடுவர்